வரக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். அதுபோல் பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்தும் கேட்டீர்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம் அனைத்துப் பகுதிகளிலும் நிதிநிலைமையைப் பொறுத்து, படிப்படியாக மேம்படுத்தப்படும். ஆகவே, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில், சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. எங்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தாலும் அவை முழுமையாகச் சரிசெய்யப்படும். இப்பிரச்சினை குறித்து நீங்கள் 2 நாட்கள் raise *செய்தீர்கள். உடனே அங்கு வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கண்டிப்பாக முழுமையான தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி, துணை மின் நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தற்பொழுது கள்ளக்குறிச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சடையம்பட்டியில் அமைந்துள்ள 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் அமைந்துள்ள மின்மாற்றியின் திறன் 2 x 16 எம்.வி.ஏ. ஆகும். அதன் உச்ச மின்பளு 24.38 எம்.வி.ஏ. ஆகும். பெருகி வரும் மின்பளு தேவையைக் கருத்தில்கொண்டு கள்ளக்குறிச்சி பகுதியில் ஒரு புதிய 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைப்பதற்காக கள்ளக்குறிச்சியிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெருவங்கூர் கிராமத்தில் 3.57 ஏக்கர் பரப்பளவு உள்ள அரசு பாட்டை புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், துணை மின் நிலையம் அமைக்க நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சி மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சடையம்பட்டு துணை மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் சடையம்பட்டு துணை மின் நிலையமோ, சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து வருகின்ற மின்சாரம் போதுமானதாக இல்லை. அது மட்டுமல்லாமல், 11th Five Year Master Plan–(2007–2012)–ல் மின் துறை மூலமாக கள்ளக்குறிச்சி பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறப்பட்டு, தச்சூர், பொறப்படாக்குறிச்சி கீரனூர் ஆகிய பகுதிகளில் நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அந்த நிலங்களில் போதுமான வசதிகள் இல்லையென்ற காரணத்தால் துணை மின் நிலையம் அமைக்கப்படாமல் அப்படியே இருக்கிறது.

முற்பகல் 11–40

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 25,000–க்கு மேற்பட்ட வீட்டு மின் இணைப்புகள், 5,000–க்கு மேற்பட்ட வணிக மின் இணைப்புகள், 150–க்கு மேற்பட்ட தொழிற்சாலை மின் இணைப்புகள் மற்றும் சுமார் 2,000–க்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் உள்ளன. சடையம்பட்டு துணை மின் நிலையத்திலிருந்து வரக்கூடிய மின்சாரம் போதுமானதாக இல்லை. எனவே, உடனடியாக துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சடையம்பட்டியில் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இருக்கின்றது. மின் மாற்றியின் திறன் 2 x 16 MVA ஆகும். ஆனால், உச்ச மின்பளு 24 MVA–தான் இருக்கின்றது. இருந்தாலும், எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு கள்ளக்குறிச்சியிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற பெருவங்கூர் கிராமத்தில் 3½ ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டிருக்கின்றது. உடனடியாக அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உடனடியாக அந்த இடத்தை எடுத்து, துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவங்கூர் ஊராட்சியிலே தேர்வு செய்யப்பட்ட இடம் போதுமானதாக இல்லையென்று E.B. அதிகாரிகள் என்னிடம் தகவல் தெரிவித்தார்கள். கள்ளக்குறிச்சியிலிருந்து உலகத்தான் ஊராட்சிக்கு EHT line வழியாக மின்சாரம் செல்கிறது. அதுமட்டுமல்ல, கள்ளக்குறிச்சியிலிருந்து உலகத்தான் ஊராட்சிக்கு

[திரு. அ. பிரபு] [2017 ஜுலை 11

மின்சாரம் தரக்கூடிய தனி feeder–ம் உள்ளது. உலகத்தான் ஊராட்சியின் அருகிலே by–pass சாலையும் இருக்கிறது. அந்தப் பகுதியைத் தேர்வு செய்தால், துணை மின் நிலையம் அமைக்க மிகவும் சுலபமாக இருக்கும். S.E., அலுவலகத்தையும் அதே இடத்தில் அமைத்துவிடலாம். Private land கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். இடத்தைத் தேர்வு செய்வதற்கு நான் C.E., S.E.–யுடன் செல்கிறேன். எனவே, இந்தப் பகுதியைத் தேர்வு செய்தால் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில், ஏற்கெனவே பெருவங்கூர் ஊராட்சியிலே 3½ ஏக்கர் இடம்தான் இருக்கின்றது. ஆனால் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் 5 ஏக்கர் நிலம் வேண்டும். அந்தப் புதிய பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாரிடம் கேட்டு, நிலம் பெற்றுத் தருவதாகச் சொல்கின்றார். அப்படி நிலம் கிடைக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருவண்ணாமலை, மலையடிவாரம், சில வார்டுகளில் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அனுமதித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். “திருவண்ணாமலை மலையடிவாரத்தில்